

தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி, மீன்வளம் மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆகியோர் நேற்று (18.01.2025) தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர், சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் கடற்கரை பகுதியில் கடல் அரிப்பினால் பாதிக்கப்பட்ட பகுதிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தனர். உடன் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு முதன்மைச் செயலாளர் டாக்டர் பி.சந்தரமோகன், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், தூத்துக்குடி மாவட்ட ஆட்சித்தலைவர். க. இளம்பகவத், மேயர் பி.ஜெகன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் வட்டம், பட்டீஸ்வரம் அண்ணா அரசு மாதிரி மேல்நிலைப்பள்ளியில் திருவள்ளுவர், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் உள்ளிட்ட 36 தமிழறிஞர்களின் திருவுருவச் சிலைகள் பொறிக்கப்பட்ட அறிவுத்திருக்கோவிலை பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் ஆகியோர் திறந்து வைத்து சிறப்புரையாற்றினார்கள்.

### துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள் விழா:

# கரூர் மாவட்ட தி.மு.க. சார்பில் குதிரை எல்கைப் போட்டி!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் வி.செந்தில் பாலாஜி துவக்கி வைத்தார்!

கரூர், ஜன. 20 -

கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க. ஸ்டாலின் அவர்களின் நல்லாசியுடன், துணை முதலமைச்சர் இளைஞர்களின் எழுச்சி நாயகர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 48வது பிறந்த நாளை முன்னிட்டு கரூர் மாவட்ட திமுக சார்பில் மாபெரும் குதிரை எல்கைப் பந்தயம் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) மாலை வாங்கல் சாலை அரசு காலனியில் நடைபெற்றது. மாவட்ட கழகத் துணைச் செயலாளர் எம் எஸ்கே. கருணாநிதி தலைமை வகித்தார். கிழக்கு ஒன்றிய கழக பொறுப்பாளர் பி. முத்துக்குமாரசாமி வரவேற்புரை ஆற்றினார். மாவட்ட கழக செயலாளர் மின்சாரம் மதுவிலக்கு ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் வி.செந்தில் பாலாஜி குதிரைப் பந்தயத்தை துவக்கி வைத்து பரிசுகளை வழங்கினார்.

வெற்றிபெற்ற பெரிய குதிரைக்கு முதல் பரிசு ரூ. 30,000 மற்றும் கோப்பை இரண்டாம் பரிசு 25 ஆயிரம் மற்றும் கோப்பை, மூன்றாம் பரிசு 20,000 மற்றும் கோப்பை, சிறிய குதிரைக்கு முதல் பரிசு 25 ஆயிரம் மற்றும் கோப்பை, இரண்டாவது பரிசு 20 ஆயிரம் மற்றும் கோப்பை, மூன்றாவது பரிசு 15000 மற்றும் கோப்பை, புதிய குதிரைக்கு முதல் பரிசு ரூபாய் 20 ஆயிரம் மற்றும் கோப்பை, இரண்டாவது பரிசு 15000 மற்றும் கோப்பை, மூன்றாவது பரிசு 10ஆயிரம் மற்றும் கோப்பை, ஆகியவற்றை அமைச்சர் வி. செந்தில் பாலாஜி வழங்கினார்.

சட்டமன்ற உறுப்பினர்கள் இரா. மாணிக்கம், பிஆர். இளங்கோ, க. சிவகாமசுந்தரி, கழக உயர் நிலை செயல்திட்ட குழு உறுப்பினர் கே.சி. பழனிச்சாமி, நெசவாளர் அணி தலைவர் நன்னியூர் ராஜேந்திரன், சட்டத்துறை இணைச் செயலாளர் என். மணிராஜ், நெசவாளர் அணி செயலாளர் பரணி கே.மணி, கொள்கை விளக்க துணை செயலாளர் கரூர் முரளி, சிறுபான்மை பிரிவு துணைச் செயலாளர் முனவர்ஜான், வர்த்தக அணி துணைச் செயலாளர் வே. பல்லவி ராஜா, தொழிலாளர் அணி துணைச் செயலாளர் பி. விஜயகுமார், கரூர் மாநகராட்சி மேயர் கவிதா கணேசன், துணை மேயர் தாரணி பி .சரவணன், மாவட்ட கழக நிர்வாகிகள் டி. ராஜேந்திரன், பூவை ரமேஷ்பாபு, மகேஸ்வரி சுப்பிரமணி, பிவி. பாரத், செயற்குழு உறுப்பினர்கள் சுப .ராஜகோபால், குளித்தலை சிவராமன், காலனி செந்தில், ஆண்டாள் பாலகுருபரன், எம். துரைராஜ், சாலைசுப்பிரமணி, என்.செல்வராஜ், மாநகரக் கழக செயலாளர் எஸ்பி.கனகராஜ், வடக்கு பகுதி செயலாளர் கரூர் கணேசன், தெற்கு பகுதி செயலாளர் க. சுப்பிரமணியன், மத்திய மேற்கு பகுதி பொறுப்பாளர் ஆர் .ஜோதிபாசு, கிழக்கு பகுதி செயலாளர் கோல்டு ஸ்பாட் ஆர்.எஸ். ராஜா, மத்திய கழக பொறுப்பாளர் வி.ஜி.எஸ். குமார், ஒன்றிய கழக செயலாளர்கள் இ. ராமர், எம் எஸ்.மணியன், கே. கருணாநிதி, எம்.ரகுநாதன், ஜி. அண்ணாதுரை, அ. சந்திரன், கே.ரவி ராஜா, கே.பாஸ்கரன், எம். ராமலிங்கம், எஸ்.சுதாகர், என். மணிகண்டன், த.கார்த்திக், சி. வளர்மதி, வி.கே. வேலுசாமி, எல். கரிகாலன், ப.தியாகராஜன், சி. கதிரவன், புகழூர் நகர கழக செயலாளர் நகர்மன்ற தலைவர் அ.குணசேகரன், பள்ளப்பட்டி நகரக் கழக பொறுப்பாளர் வாசிம் ராஜா, பொதுக்குழு உறுப்பினர்கள் என். எஸ் ஆறுமுகம், வி.கருப்பண்ணன், விகேடி ராஜ்கண்ணு, எஸ்டேட் வேலுச்சாமி, கே.சாமிநாதன், சி.கருப்பையா, பிபி சரவணன், இ.ஜாபருல்லா, சிவகாமி சண்முகம், எஸ்.காளியப்பன், எம்.சிவசாமி, ஏ.நஞ்சுண்டேஸ்வரன், என்.ராமலிங்கம், சிவகாமசுந்தரி, பிஏகுமார், பேரூர் செயலாளர்கள் கே .அம்மையப்பன், பிஎஸ்மணி, கே. முரளிராஜா, இ.ரவீந்திரன், ஆர்மோகன்ராஜ், எம்.சசிகுமார், எம் முத்து, சி தங்கராஜ், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் வெங்கமேடு. சக்திவேல், அணி அமைப்பாளர்கள் ஆர்ஜிசரவண மூர்த்தி, ஜிம்.எம் சிவா, கே நந்தினிதேவி, கே தாசப்பிரகாஷ், ஏ.சுப்பிரமணியன், தென்னிலை பாலு, பி.சங்கர், புலவர் அருணா பொன்னுசாமி, வி. அருண், பி. மோகன சுப்பு, பழ.அப்பாசாமி, எம்.ப்ரின்சி, சி.நவாஸ் கான், மா.அம்பிகாபதி, தம்பி சுதாகர், எம்.விக்ரம், கு.வடிவேல், எஸ்.செல்வராஜ், சாவி நல்லுசாமி எஸ் மனோகர், எம்பிஎஸ். சுரேஷ், பங்க் கேசுப்பிரமணி, விஆர். அண்ணாவேலு, மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் ஏ. கனகராஜ், சிகே.ராஜா, எம். பாபு, ஜிவிஅருண், யுவராஜ், கிழக்கு ஒன்றிய கழக நிர்வாகிகள் ஆர். சோமசுந்தரம், இல்ஏ.சுகுணா, டிஎஸ்பி.சுப்பிரமணியன், வி பழனிசாமி, பி.பிரபு, சி.சரவணன் ஆகியோர் பங்கேற்றனர். மாவட்டப் பிரதிநிதி பி.கதிர்காமம் நன்றி கூறினார்.

### எம்.அப்துல்மாலிக் வரவேற்புரை!

# செம்பனார்கோயில் - தரங்கம்பாடியில் பாக முகவர்கள் கூட்டம்!

## நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ.- மன்னை த.சோழராஜன் சிறப்புரை!

மயிலாடுதுறை, ஜன. 20 -

மயிலாடுதுறை மாவட்டம் செம்பனார்கோயில் தெற்கு ஒன்றியம் மற்றும் தரங்கம்பாடி பேரூர் தி.மு.க. பாக முகவர்கள் (பி.எல்.ஏ.2) மற்றும் பூத் கமிட்டி உறுப்பினர்கள் (பி.எல்.சி.) கலந்தாய்வு கூட்டம் சங்கரம்பந்தல் இலுப்பூரில ரமாட்டி திருமண மண்டபத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு செம்பனார்கோயில் தெற்கு ஒன்றியச் செயலாளர் எம்.அப்துல்மாலிக் வரவேற்றார்.

சட்ட மன்ற முன்னாள் உறுப்பினர் எம்.எம்.சித்திக், மாவட்ட துணைச் செயலாளர் மு.ஞானவேலன், செம்பனார்கோயில் வடக்கு ஒன்றியச் செயலாளர் பி.எம்.அன்பழகன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்திற்கு மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன் தலைமை தாங்கி பேசினார்.

கூட்டத்தில் மாநில மாணவர் அணி துணைச் செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற தொகுதி பார்வையாளர் மன்னை த.சோழராஜன் கலந்து கொண்டு கருத்துரை வழங்கினர். கூட்டத்தில் வரும் 2026 சட்ட மன்ற தேர்தல் பணியை இன்றே தொடங்கிடுவது என்றும் பி.எல்.சி. யினர் அனைவரும் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட வாக்காளர்களை நேரில் சந்தித்து தி.மு.க. ஆட்சியின் சாதனையை எடுத்துக் கூறியும், ஒவ்வொரு குடு ம்பத்தினரும் தி.மு.க. ஆட்சியில் பெற்ற பயன்களை எடுத்துக் கூறி வாக்குகளை சேகரித்திட வேண்டும் என்றும், இன்றே கழகத்தினர் தேர்தல் பணியை தொடங்கிட வேண்டும் என தீர்மாங் கள் நிறைவேற்றப்பட்டது.

கூட்டத்தில் மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி ஒருங்கிளைப்பாளர் கே.விக்னேஷ், செம்பனார்கோயில் தெற்கு ஒன்றிய நிர்வாகிகள் மாவட்ட பிரதிநிதிகள் ஈச்சங்குடி க.இளங்கோவன், கே.எஸ். எஸ்.கருணாநிதி, கே.பி. ராஜா, ஒன்றியக் கழக துணைச் செயலாளர்கள் எஸ்.சிவக்குமார், கா. இளங்கோவன்,

செல்லம்மாள்பன்னீர் செல்வம், பொருளாளர் ஏ.ரெங்க ராஜ், தரங்கம்பாடி பேரூர் நிர்வாகிகள் அவைத்தலைவர் எஸ்.கந்தசாமி, மாவட்டப் பிரதி நிதிகள் ஏ.சடகோபன், பொன்ராஜேந்திரன், துணைச் செயலாளர்கள் த.மதியாழகன், எஸ்.பால்ராஜ், அம்பிகாபிரபு பொருளாளர் வி.கண்ணதாசன், ஒன்றிய பிரதிநிதிகள் ஏ. கே.சந்துரு, கே.ராஜா, எஸ். முகமது இக்பால், ஜி.செந்தில்குமார் மற்றும் ஒன்றிய, கிளைக் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர். முடிவில் தரங்கம்பாடி பேரூர் செயலாளர் எஸ்.கே.முத்துராஜா நன்றி கூறினார்.

# உத்தமபாளையம் வட்டமலைக்கரை நீர்த்தேக்க அணை!

## அமைச்சர் மு.பெ.சாமிநாதன் நேரில் ஆய்வு!

திருப்பூர், ஜன.20-

திருப்பூர் மாவட்டம், பரம்பிக்குளம்-ஆழியாறு திட்டம் திருமூர்த்தி அணையிலிருந்து பரம்பிக்குளம் பிரதான கால்வாய் சரகம் 86.900 கி.மீ இல் உள்ள கள்ளிபாளையம் மதகில் காங்கயம் நீர் வெளிப்போக்கி வழியாக திருப்பூர் வட்டம், உத்தமபாளையம் கிராமத்திலுள்ள வட்டமலைக்கரை ஓடை நீர்த்தேக் கத்திற்கு 08.01.2025 முதல் 18.01.2025 வரை 10 நாட்களில் 240 மில்லியன் கன அடிக்கு மிகாமல் (நீரிழப்பு உட்பட) பொது மக்கள் மற்றும் கால்நடைகளின் குடிநீர் தேவைக்காக, அணையின் நீரிருப்பு மற்றும் நீர்வரத்தினைப் பொறுத்து, தேவைக்கேற்ப, தண்ணீர் திறந்து விட அனுமதி அளித்து அரசு ஆணையிட்டது. விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று வட்டமலைக்கரை அணைக்கு, கடந்த 8ம் தேதி கள்ளிபாளையம் மதகில் இருந்து தண்ணீர் திறக்கப்பட்டது. இந்நிலையில், வட்டமலைக்கரை அணைக்கு தண்ணீர் வந்தது. வட்டமலை ஓடை வழியோர கிராம மக்கள் நீர்வழிப் பாதை அருகே பொங்கல் வைத்து, தண்ணீரில் மலர்கள் தூவி வணங்கி வரவேற்றனர். இந்த தண்ணீர் திறப்பால் 23 இடங்களில் கட்டப்பட்ட தடுப்பணைகள் நிரம்பியுள்ளன. இதன் காரணமாக வட்டமலை ஓடை யின் இரு கரைகளிலும், 50 கி.மீ., தூரம் வரை, 58க்கும்மேற்பட்ட வழியோர கிராமங்களில் நிலத்தடி நீர்மட்டம் உயரும், விவசா யத்துக்கு நீர் ஆதாரம் மேம்படும். அணைக்கு நீர் வருவதை அறிந்த கிராம மக்கள் பொங்கல் வைத்து தண்ணீரை வழிபட்டனர். அணையில் நீர் நுழைவு பகுதியில் பொதுமக்கள், விவசாயிகளும் பொங்கல் வைத்து, மலர் தூவி வரவேற்றனர்.

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் மு.பெ. சாமிநாதன் வடசின்னாரி பாளையம், உத்தமபாளையம் வட்டமலைக்கரை ஆகிய பகுதிகளுக்கு நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார் பின்னர் நீர்வரத்தினை மலர்கள் தூவி வரவேற்றார்.

இந்த ஆய்வின் போது திருப்பூர் தெற்கு மாவட்டச் செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன், உதவி செயற்பொறியாளர் சீனிவாசன், உதவி பொறியாளர் கோகுல் வட்டாட்சியர் மோகனன், வெள்ளக்கோவில் ஒன்றிய கழக செயலாளர் கே.சந்திரசேகரன் உள்பட மாவட்ட, ஒன்றிய, நகர கழக நிர்வாகிகள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.



திருப்புவனம் மேற்கு ஒன்றிய தி.மு.க. செயற்குழுக் கூட்டம் அவைத் தலைவர் இளங்கோவன் தலைமையில் ஒன்றியச் செயலாளர் வசந்தி சேங்கைமாறன் முன்னிலையில் நடைபெற்றது. கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்களை மாவட்ட கழக துணைச் செயலாளர் திருப்புவனம் பேரூராட்சி மன்றத் தலைவர் த.சேங்கை மாறன் வாசித்தார். கீழ்க்கண்ட தீர்மானங்கள் வருகின்ற 21.22 நாட்களில் சிவகங்கை மாவட்டத்திற்கு வருகை தரும் தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் வருகை முன்னிட்டு திருப்புவனம் ஒன்றிய கழகத்தின் சார்பில் 3000 க்கு மேற்பட்டவர்கள் சிவகங்கை எல்கை பெருமாள்பட்டியில் வரவேற்பளிக்க தீர்மானிக்கப்படுகிறது. இந்நிகழ்ச்சியில் முன்னாள் யூனியன் துணை சேர்மன் மூர்த்தி, பேரூராட்சி மன்ற துணைத் தலைவர் ரகமத்துல்லாகான், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் பொற்கோ, ஒன்றிய நிர்வாகிகள் சுப்பையா, ஈஸ்வரன், ரவி, மகேந்திரன், சக்திமுருகன், ராமு, மீனாட்சிசுந்தரம், மாவட்ட விவசாயிஅனி துணைத் தலைவர் சேகர், மாவட்டத் தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் மணிகண்டன், ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர்கள் தேவதாஸ், அறிவுகரசு, பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள் பாலகிருஷ்ணன், கண்ணன், வேல்பாண்டி மற்றும் கிளைக் கழக வட்டக் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.




நெல்லை பாளையங்கோட்டை ஜி.வி. ஸ்போர்ட்ஸ் கிளப் நடத்திய அகில இந்திய அளவிலான மின்னொளி பெண்கள் கபடி போட்டி 14,15,16, ஆகிய தேதிகளில் நடைபெற்றது. பரிசு வழங்கும் நிகழ்வில் பாளை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல் வகாப் பங்கேற்று முதல் பரிசை வென்ற இந்தியன் ரயில்வே அணிக்கு பரிசு தொகையும் வெற்றி கோப்பையும் வழங்கினார். 2வது பரிசை இந்தியன் ரயில்வே டெல்லி அணிக்கு நெல்லை அருணா கார்டியா கேர் மருத்துவமனை நிறுவனமும், 3வது பரிசு அந்தியூர் அணிக்கு வெனிஸ் பேக்கரி நிறுவனத்திற்கும் வழங்கி பாராட்டினர். நிகழ்வில் துணை மேயர் ராஜ், வழக்கறிஞர் தினேஷ், பகுதி செயலாளர் வினோத் குமார், மாமன்ற உறுப்பினர்கள் சகாய ஜுலியட் மேரி, அம்பிகா முத்து,ஒன்றிய கவுன்சிலர் முபின் இஸ்மாயில், குருச்சி ஆனந்த்,மாநகர பிரதிநிதி ஜாமியா பீர் முகம்மது ஆசிக், பகுதி இணைச் செயலாளர் புஷ்பராஜ், தச்சை பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர் மகேஷ் ஆதித்தன், மானூர் ஒன்றிய இளைஞர் அணி துணை அமைப்பாளர் காணார்பட்டி சாமுவேல், இம்மானுவேல், பாளை சதீஷ், வாசுகி செல்லத்துரை, ஹரி உட்பட கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கோட்டூர் ஜப்பார்
### சனவரி 20 (2020)



தனது இளமைக் காலத்திலேயே கழகப் பணியாற்றத் தொடங்கியவர்.

ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டப் பிரதிநிதியாகவும், கோட்டூர் ஒன்றியப் பொறுப்பாளராகவும், நாகை தெற்கு மாவட்ட சிறுபான்மையினர் நலஉரிமைப் பிரிவு அமைப்பாளராகவும் பொறுப்பு வகித்தவர்.

ஊராட்சி மன்றத் தலைவராகவும், புத்தகரம் கூட்டுறவு சங்க தலைவராகவும் பதவி வகித்தவர்.

இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டம் மற்றும் தலைமை அறிவித்த பல்வேறு போராட்டங்களில் கலந்து கொண்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.